| | | | |
|---|---|---|---|
| **வாக்குமூலம்** Date: 19.09.2023 | | | |
| நீதிமன்றம் : குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மணப்பாறை | | | |
| வழக்கு எண்: CC 5 /2023 | | | |
| வழக்கு சாட்சி : PW1 | | | |
| பெயர் | : திருமதி. கிரித்திகா | ஜாதி | : |
| த/பெ | : திரு. பாலு | தொழில் | : சுயதொழில் |
| கிராமம் | : விடத்திலாம்பட்டி | சமயம் | : இந்து |
| தாலுக்கா | :மணப்பாறை | வயது | : 32 |
| ( எதிரிகள் ஆஜர் ) | | | |

---

**அரசு தரப்பு முதல் விசாரணை தொடர்ச்சி**

**1**. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். கொரனா காலத்தில் எனக்கு வேலை இல்லாததால் சுயதொழில் செய்து வந்தேன். அதன்பிறகு எனது குழந்தையை நான் பள்ளியில் சேர்த்தேன். தொடர்ச்சியாக என்னை வேலைக்கு போகக்கூடாது என்றும், அம்மாவீட்டில் பணம் மற்றும் நகைகளை கொண்டு வரச்சொல்லி எனது கணவரும், மாமனாரும் தொந்தரவு செய்தார்கள். அதன்பிறகு எனது சித்தியிடம் ரூ.5 லட்சம் ரொக்கமாக வாங்கிவரச்சொன்னார்கள். ஏற்கனவே ரூ.1.1/2 லட்சம் பணம் வாங்கி கொடுத்தால் மீண்டும் பணம் வாங்கிகொடுக்ககூடாது என்று சொன்னேன். அதன்பிறகு என்னை மாமனாரும், கணவரும் சேர்ந்து என்னை அடித்து, உதைத்தால் நெஞ்சிலும், தொடையிலும், அடித்து வீட்டை விட்டு வெளியே துறத்திவிட்டார்கள். அதன்பிறகு நீ இங்கே இருக்ககூடாது என்று சொல்லி தேவடியா, தட்டுவாணி என்று சொல்லி தகாத வார்த்தைகளால் திட்டி, மீறி இருந்தால் கொலை செய்து விடுவதாக மிரட்டினார்கள்.

2. நான் எனது உடைமைகளை எடுக்க சென்றபோது நீ வாழ்ந்ததற்கு சரியாகி போனது என்று சொல்லி உடைமைகளை எடுக்க விடவில்லை. நான் எனது மகனை அழைத்து கொண்டு ஏற்கனவே பஞ்சாயத்துசெய்த ரவி, ராஜாராமன் ஆகியோர்களை கூப்பிட்ட போது அவர்கள் வரமறுத்துவிட்டார்கள். அதனால் காவல்நிலையம் சென்றுபுகார் கொடுத்தேன்.

3. 05.10.2021 ம் ஆண்டு அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியிடு செய்யப்படுகிறது. அது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.

| | |
|---|---|
| **வாக்குமூலம்** Date: 19.09.2023 | |
| நீதிமன்றம் : குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மணப்பாறை | |
| வழக்கு எண்: CC 5 /2023 | |
| வழக்கு சாட்சி : PW2 | |
| பெயர் : திருமதி. தேவகி | ஜாதி : |
| த/பெ : திரு. பாலு | தொழில் : விவசாயம் |
| கிராமம் : விடத்திலாம்பட்டி | சமயம் : இந்து |
| தாலுக்கா :மணப்பாறை | வயது : 60 |
| ( எதிரிகள் ஆஜர் ) | |

---

**அரசு தரப்பு முதல் விசாரணை தொடர்ச்சி**

**1**. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது மகள். ஆஜர் எதிரிகள் எனது மகளின் கணவர் மற்றும் மாமனார். எனது மகளை 1ம் எதிரிக்கு திருமணம் செய்து கொடுத்திலிருந்து நகை, பணம் கொடுக்கவில்லை என்று சொல்லி பிரச்சனைசெய்து வந்தார்கள். அப்ப, அப்ப எனது மகளை அடிப்பார்கள். அவள் எங்கள் வீட்டிற்கு வரவும் அவர் எங்களது வீட்டிற்கு வருவார். எனது மகளுக்கு செலவிற்கு கூட பணம் தரமாட்டார்கள். நான்தான் பால்கறந்த பணத்தை கொண்டு அவ்வப்போது மகளுக்கு உதவி செய்துவந்தேன். அதனை தொடர்ந்து எனது மகள் வேலைக்கு போக ஆரம்பித்தார்.

2. வேலைக்கு போக ஆரம்பித்த பிறகு எனது மகளை அடித்து துன்புறுத்தினார்கள். எனது மகள் வேலைக்கு போன பணத்தை கொடுக்காதால் பிரச்சனை செய்தார்கள். எனது பேரனுக்கு பிறந்த நாளைக்குகூட துணிமணிகள் எடுத்து தரமாட்டார்கள். 05.10.2021 அன்று எனது மகளை அடித்து அவர்களை குழந்தையுடன் வீட்டைவிட்டு வெளியே அனுப்பிவிட்டு பூட்டிவிட்டார்கள். எனது மகளுக்கு நெஞ்சு, தொடை ஆகிய பகுதிகளில் வீங்கிவிட்டது. முடியை இழுத்து அடித்துள்ளார்கள். அதன்பிறகு காவல்நிலையத்தில் புகார்கொடுத்தோம். அவர்கள் நடவடிக்கை எடுக்காததால் ஐஜீ ஆபிஸ் வரை புகார் கொடுத்தோம். அதன்பிறகு போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.**

| | | | |
|---|---|---|---|
| **வாக்குமூலம்** Date: 19.09.2023 | | | |
| நீதிமன்றம் : குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மணப்பாறை | | | |
| வழக்கு எண்: CC 5 /2023 | | | |
| வழக்கு சாட்சி : PW3 | | | |
| பெயர் | : திரு. வீராச்சாமி | ஜாதி | : |
| த/பெ | : திரு. காத்தான் | தொழில் | : கூலி |
| கிராமம் | : விடத்திலாம்பட்டி | சமயம் | : இந்து |
| தாலுக்கா | :மணப்பாறை | வயது | : 45 |
| ( எதிரிகள் ஆஜர் ) | | | |

---

**அரசு தரப்பு முதல் விசாரணை தொடர்ச்சி**

**1**. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். அ.சா.1, 2 எனக்கு தெரியும். எதிரிகளை தெரியும். 2001 ம் ஆண்டு கிரித்திகாவை அவரது கணவர் அடிப்பதாக என்னிடம் சொன்னார். நகை, பணம் வேண்டுமென்று சொல்லி கணவரும்,தனது மாமனாரும் அடிப்பதாக என்னிடம் சொன்னார். அதன்பிறகு கொடுத்த புகாரின் பெயரில் போலிசார் என்னை விசாரித்தார்கள். விசாரணையில் அடிக்கடி அ.சா.1 பிரச்சனை என்று சொல்லி வீட்டிற்கு வருவார் என்று சொன்னேன்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.